**ஒதுக்கீட்டுத் தலைப்பு- 266**

**வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படும் பிரதேச செயலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012**

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

i. கிராமிய பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புக்கள் ஊடாக அரசாங்க நடவடிக்கைகளையும் சட்ட ரீதியாக கையளிக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலையும் ஒருங்கிணைத்தல்.

ii. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் முகவராக செயற்படுதல்.

iii. வருமான சேகரிப்பு.

iv. ஒதுக்கப்பட்ட நிதிகளின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீடு.

v. பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்கல்.

vi. ஏற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகளை நோக்கி பல்வேறு வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தலும் நெறிப்படுத்தலும்.

vii. மாகாண சபைகளிற்கு அதன் நடவடிக்கைளில் உதவிபுரிதல்.

viii. கூட்டு உறவினைப் பேணுவதன் மூலம் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் செயற்பாடுகளில் முறையான ஒருங்கிணைப்பு

ix. மக்களுக்கு வினைத்திறனான சேவையினை வழங்குவதற்காக பிரதேச செயலகங்கள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்களை முறைப்படி மேற்பார்வை செய்தல்.

x. அரசாங்கத்தின் தீர்மானங்களை அமுல்படுத்தல் மற்றும் இயல்பு நிலைக்கு உதவுதல்

xi. உரிய வேளையில் சேவைகளை உறுதிப்படுத்துவதற்காக ''பிரசைகள் அக்கறை'' இனை அமுல்படுத்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) வவுனியா தெற்கு தமிழ்

(ஆ) வவுனியா தெற்கு சிங்களம்

(இ) வவுனியா வடக்கு

(ஈ) வெங்கல செட்டிக்குளம்

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 11 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (ஊ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மாவட்டச் செயலகத்தினால் 2013 மார்ச் 31 அளவில் பின்வரும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு/ வருமானக் குறியீடு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 266 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2013.03.27 |
| 26601 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 2013.02.28 |

### (ஆ) கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

(i) மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 (1) |

(ii) சிட்டைகள், அங்கீகாரங்கள், கொள்வனவு ஆவனங்கள் போன்றன இன்மை காரணமாக மாவட்டச் செயலகத்தின் ரூபா 1,203,176 மொத்தமான இருபத்திரண்டு கொடுக்கல்வாங்கல்களை கண்காய்வில் திருத்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

(iii) ரூபா 345,707 தொகையான மீண்டுவரும் செலவினங்கள் பதினொரு சந்தர்ப்பங்களில் பிழையாக வகைப்படுத்தி வவுனியா மாவட்டச் செயலகத்தின் பல்வேறு மூலதனச் செலவின விடயங்களிற்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

(iv) ரூபா 89,530 தொகையான மீண்டுவரும் செலவினங்கள் பதினொரு சந்தர்ப்பங்களில் பிழையாக வகைப்படுத்தி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் பல்வேறு செலவின விடயங்களிற்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற நான்கு பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 167,339,888 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 163,216,474 பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 4,123,414 அல்லது 2.46 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 119,500,000 | 131,339,888 | 130,590,286 | 749,602 | 0.57 |
| மூலதனம் | 36,000,000 | 36,000,000 | 32,626,188 | 3,373,812 | 9.3 |
| **மொத்தம்** | **155,500,000** | **167,339,888** | **163,216,474** | **4,123,414** | **2.46** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக 16 அமைச்சுக்கள் மற்றும் 10 திணைக்களங்களிடமிருந்து முறையே 144 மில்லியன் மற்றும் ரூபா 572 மில்லியன் அடங்கலாக ரூபா 716 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி

ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் முறையே ரூபா 130 மில்லியன் மற்றும் ரூபா 554 மில்லியன் அடங்கலாக ரூபா 684 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, ரூபா 32 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(iii) பொதுச் செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி, 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளிலிருந்து முறையே 2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதிலும், மீண்டுவரும் செலவினம் தொடர்பில் 0.57 சதவீதம் மாத்திரம் மாவட்டச் செயலகத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது.

**(iv) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்**

2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினங்களிற்கு பாதீட்டு மதிப்பீட்டினூடாக வழங்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செலவினம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் நி.பி. 66 இன் கீழ் வகைமாற்றலுக்கு திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது. இருப்பினும், மீளாய்வாண்டில் ரூபா 850,000 நிதிஏற்பாடு நி.பி. 66 இன் கீழ் வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கினக்கக் கூற்று**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10,000,000 | 8,291,166 | 7,000,000 | 7,988,254 | 40,000,000 | 32,843,124 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கிணக்கக் கூற்றின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற

மீதிகள் ரூபா 1,261,490 மொத்தமானதுடன் அந்த நிலுவையாக விருக்கின்ற மீதிகளின் அறவீட்டுத் தன்மை மீதான தொடர்நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது.

(ii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாட்டுடன் இணங்காது ரூபா 99,000 தொகையான இரண்டு கடன்களை மாவட்டச் செயலகம் வழங்கியிருந்தது.

(iii) வவுனியா, மாவட்டச் செயலகத்தினால் பேணப்பட்ட புத்தகங்களிற்கும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிக்குமிடையே வரவு மீதி தொடர்பில் ரூபா 34,800 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் கட்டுநிதிக் கணக்குகளின் வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 1,243,742,665 மற்றும் ரூபா 1,243,742,217 ஆக காணப்பட்டதுடன் ரூபா 448 ஆன வேறுபாடு 2013 சனவரி 15 ஆந் திகதியன்றே சரிசெய்யப்பட்டிருந்தது.

**(ஊ) பொதுவைப்பு கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 63,817,283 ஆனதுடன் அவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0/0/42/0 | 63,817,283 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரூபா 2,337,816 தொகையான 40 வைப்பு மீதிகள் மீது நிதிப்பிரமாணம் 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 565(5) இன் படி, தொடர்ந்துவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் பொது 71 படிவத்தில் மாதாந்த வைப்புப் பொழிப்பு அறிக்கை கணக்காய்விற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், நி.பி. ஏற்பாட்டிற்கு முரணாக மாவட்டச் செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களால் 2012 ஆம் ஆண்டிற்கான மாதாந்த வைப்புப் பொழிப்பு அறிக்கை கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் காலம் கடந்த வைப்புக்களின் அரையாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளுராட்சி நிறுவன தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்து வரும் காலத்திற்கு ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்ட திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 உள்ளகக் கணக்காய்வு

2012 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது மற்றும் குறைவாகப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | | |
| (i) வாகனங்கள் | 01 | 2 ஆண்டுகள் |
| (ii) பிக்கப் | 02 | 3 ஆண்டுகள் |

(ஆ) வருடாந்த கணப்பீட்டுச் சபையினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு சம்பந்தமான கணப்பீட்டுச் சபை அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட மிகைகள் மற்றும் குறைவுகள் மற்றும் ஏனைய சிபார்சுகள் மீது பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக நிதிப்பிரமாண இல. 756 மற்றும் 757 இன்படி சகல கிராம சேவகர் அலுவலகங்கள் சம்பந்தமாக கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் ஒரு ஆண்டிற்கும் குறைவான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 3,140,590 ஆகும்.

## 1.8 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| நிதிப்பிரமாணங்கள் | ரூபா | |
| நி.பி. 110 (1) | 284,838 | அனேக விபத்துக்களுடன் தொடர்புபட்ட ரூபா 284,838 தொகையான நட்டங்கள் தொடர்புடைய நட்டங்கள் பதிவேட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 108(1)(சீ) மற்றும் நி.பி. 109(1) | 79,647 | (அ) தேவையான நடவடிக்கைகளை எடுத்த பின்னர் 25 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நட்டங்களை பதிவழிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| | 35,242 | (ஆ) பொது நிர்வாக உல்நாட்ட லுவல்கள் அமைச்சின் செயலாள ரிடமிருந்து ரூபா 35,242 தொகையான நட்டங்களைப் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், இவ்வறிக்கைத் திகதி வரையும் நட்டங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை |
| நி.பி. 1646 | - | 2012 ஆம் ஆண்டிற்காக மாவட்டச் செயலகம் நாளாந்த ஓட்ட |

அட்டவணைகளையும் மாதாந்த பொழிப்பறிக்கையினையும் சமர்ப்பித் திருக்கவில்லை.

**1.9 வங்கிக் கணக்குகளை பேணுவதில் நலிவுகள்**

**சீராக்கலிற்கான மீதிகள்**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2012 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட சீராக்கல்களின் காலப்பகுப்பாய்வில் வெளிப்பட்ட தகவல்கள் படி வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகளின் பெறுமதி ரூபா 3,535 ஆகும்.

**1.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 மே முதல் 2012 யூன் வரை முன்னைய மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளரின் வதிவிடத்தினை புதிய மாவட்டச் செயலாளருக்குக் கையளிக்காமையால் மன்னார் வீதி, வவுனியாவிலுள்ள தற்காலிக வதிவிடத்தினை புதிய செயலாளர் பயன்படுத்த வேண்டியிருந்தது. தற்காலிக மற்றும் கையளிக்கப்படாத வதிவிடங்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 79,708 தொகையான தண்ணீர் மற்றும் மின்சார பட்டியல்கள் மாவட்டச் செயலாளரினால் செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 03 கோயில்களின் மூலஸ்தான அஸ்திவார நிர்மாணம் தொடர்பில் 2012 ஒக்தோபர் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் பரிசோதனைத் திகதி வரை வேலை தொடங்கப்படாதிருக்கையிலும் கூட மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 270,000 அல்லது 72 சதவீதம் 2012 யூன் 29 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. இருப்பினும், 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தர் வேலை முடிவுறுத்தல் சான்றிதழை வழங்கியிருந்தார்.

**2.8. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 18 | 13 | 07 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 07 | 05 | 02 | -- |
| (iii) | இரண்டாம் மட்டம் | 291 | 171 | 120 | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப மட்டம் | 67 | 53 | 14 | -- |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | -- | 07 | -- | -- |
| | மொத்தம் | 383 | 249 | 143 | 02 |